பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

08  12 2024                    7  15

ஞாயிற்றுக்கிழமை                    காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மை, ஆன்மிக பாரம்பரியம் ஆகியவை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், 3 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று ரஷ்யா செல்கிறார்.

3. விளையாட்டுத்துறையில் இந்தியா பல்வேறு சாதனைகளைப் படைத்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

4. சிறுபான்மையினர் மற்றும் விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கிரன் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

5. ஆசியக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இன்று இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவாக்குவதற்கான இலக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகமதாபாதில் நடைபெற்ற சுவாமி நாராயண் அமைப்பின் பொன்விழா நிழ்ச்சியில் காணொலி மூலம் கலந்துகொண்டு பேசிய அவர், ரஷ்யா – யுக்ரைன் இடையேயான போரின்போது யுக்ரைனில் இருந்து இந்தியர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்காக இந்த அமைப்பு மேற்கொண்ட முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

நாட்டின் கலாச்சார ஆன்மிக பாரம்பரியத்தை உலக அளவில் பரப்புவதில் இந்த அமைப்பின் பங்களிப்பு அளப்பரியது என்று அவர் தெரிவித்தார்.

இளம் தலைமுறையினருக்கு புதிய வாய்ப்புகளை வழங்கும் வகையில் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் என்ற கருத்தரங்கு வரும் ஜனவரி மாதம் ஏற்பாடு செய்யப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் ஆன்மிக பாரம்பரியம் உலக நாடுகளை ஈர்த்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், 3 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று ரஷ்யா செல்கிறார்.

மாஸ்கோவில் நடைபெற உள்ள இந்தியா – ரஷ்யா ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு மாநாட்டில் அந்நாட்டுப் பாதுகாப்புத்துறை அமைசச்ர் திரு. **Andrey Belousou**-வுடன் இணைந்து கலந்துகொள்கிறார்.

அவரது இந்தப் பயணத்தின்போது, பாதுகாப்பு, ராணுவம் மற்றும் தொழில்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்க உள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது மண்டல மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும், பரஸ்பரம் தங்களது கருத்துகளை இவ்விரு தலைவர்களும் பகிர்ந்துகொள்ள உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் ஏவுகணை வசதியுடன் கூடிய ஐ.என்.எஸ். துஷில் விமானம்தாங்கி போர்க்கப்பலை நாட்டிற்கு அவர் அர்ப்பணிக்கிறார்.

பின்னர் மாஸ்கோவில் இரண்டாம் உலகப்போரில் உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு திரு. ராஜ்நாத் சிங் அஞ்சலி செலுத்துகிறார்.

<<<<>>>>

2025-26ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் தொடர்பாக பல்வேறு விவசாய சங்கங்கள் மற்றும் முன்னணி வேளாண் பொருளாதார நிபுணர்களுடன் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனை நடைபெற்றது.

புதுதில்லியில் நேற்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வேளாண்துறையை மேம்படுத்துவதற்கான பல்வேறு அம்சங்கள் குறித்து விவாவதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுடனும் நிதியமைச்சர் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி உள்ளிட்ட உயரதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

<<<<>>>>

விளையாட்டுத்துறையில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

நாகாலாந்து மாநிலம் கோஹிமாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 10 ஆண்டுகளில் விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்வதை நோக்கமாகக் கொண்டு நாடு முழுவதும் விளையாட்டுக்கான கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாடுகளிடையே ஏற்படும் மோதல்களுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

தோஹாவில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், ரஷ்யா – யுக்ரைன் இடையேயான போர் காரணமாக உலக அளவில் பொருளாதார பாதிப்புகள் ஏற்படுவதாக கூறினார்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் இந்தியா, தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வளைகுடா நாடுகளில் நிலவும் பதற்றமாக சூழல் இந்தியாவின் பொருளாதார மற்றும் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக திரு. ஜெய்சங்கர் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் உள்ள சிறுபான்மையினர் மற்றும் விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காக நிதியுதவி வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரன் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் மத்திய சிறுபான்மையின நல அமைச்சகத்திற்கும் – தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சபைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தம் நலிவுற்ற பிரிவு மக்களின் மேம்பாட்டிற்கு உதவிடும் என்று கூறினார்.

தொழில்முனைவோரை ஊக்குவிப்பதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்றும், இது சுயசார்பு இந்தியாவின் இலக்குகளை எட்டுவதற்கு உதவிடும் என்றும் கூறினார்.

<<<<>>>>

ஆந்திர மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் எரிசக்தி மேம்பாட்டுத் திட்டங்கள் அம்மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவிடும் என்று மத்திய எரிசக்தித்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கூறியுள்ளார்.

விஜயவாடாவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர், ஆந்திர அரசு மத்திய அரசின் எரிசக்தி நிறுவனத்துடன் இணைந்து மேற்கொண்டு வரும் திட்டங்கள் தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறினார்.

எரிசக்தி திறன் மற்றும் எரிசக்தி சேமிப்பு ஆகியவை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் என்று தெரிவித்தார்.

குறைந்த செலவில் மின்சார வசதி அளிக்கும் வகையில் மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மக்களின் மீதான நிதிச் சுமையை பெருமளவில் குறைத்திடும் என்று திரு. மனோகர்லால் கூறினார்.

<<<<>>>>

ஐரோப்பிய வர்த்தக கூட்டமைப்பு நாடுகளிடம் இருந்து நூறு பில்லியன் டாலர் அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய – ஐரோப்பிய நாடுகளிடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் இதுகுறித்து விவாதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மும்பையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இந்தியா சார்பில் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவும், நாட்வே தூதர் திரு. **May-Elin Stner** தலைமையிலான பிரதிநிதிகள் குழுவும் இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக ஒத்துழைப்புகள் குறித்து விவாதிக்க உள்ளன.

<<<<>>>>

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேசிய விருதுக்காக பல்வேறு பிரிவுகளில் மொத்தம் 45 உள்ளாட்சி அமைப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சிறந்த நிர்வாகம், சமூக மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு உள்ளாட்சி அமைப்புகள் விருதுக்காக தெரிவு செய்யப்படுகின்றன.

தேசிய விருதுகாக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் 42 சதவீதம் பெண்கள் தலைமையிலான உள்ளாட்சி அமைப்புகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விருதுக்காக நாடு முழுவதிலும் இருந்து ஒரு லட்சத்து 94 ஆயிரம் கிராம பஞ்சாயத்துகள் பங்கேற்றுள்ளன.

புதுதில்லியில் இம்மாதம் 11ஆம் தேதி நடைபெற உள்ள 2022-23ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேசிய விருதுகள் வழங்கும் விழாவில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு விருதுகளை வழங்குகிறார்.

<<<<>>>>

எல்லைப் பாதுகாப்புப் படையின் 60வது நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பஙகேற்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் எல்லைப் பாதுகாப்புப் படையின் அணிவகுப்பையும் அவர் பார்வையிடுகிறார்.

இதில் 7 வீரர்களுக்கு வீரதீர செயல்களுக்கான விருது வழங்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாட்டில் டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது தொடர்பான ஆய்வறிக்கையில் டிஜிட்டல் பரிவத்தனைகளில் 30 கோடி தனிநபர்களும், 50 கோடி வர்த்தகர்களும் தடையற்ற பணப் பரிவர்த்தனையை மேற்கொள்ள இது உதவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வங்கிகள் கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் டிஜிட்டல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

<<<<>>>>

வடகிழக்கு இந்தியாவின் கலாச்சார பெருமை மற்றும் பன்முகத் தன்மையைப் போற்றும் வகையில் அஷ்டலட்சுமி திருவிழா இன்று நிறைவடைகிறது.

புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்று வரும் இந்த விழாவில் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு கலையம்சங்கள் பொருந்திய படைப்புகள் காட்சிப்படுத்தப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மூன்று நாள் நடைபெறும் இந்த விழாவில், அசாம், அருணாச்சலப்பிரதேசம், மேகாலயா, மணிப்பூர், நாகாலாந்து, மிசோரம், திரிபுரா, சிக்கிம் ஆகிய 8 மாநிலங்கள் பங்கேற்கின்றன.

இதில் 250க்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்களின் தனித்துவம் மிக்க படைப்புகள், கைத்தறித் துணிகள், புவிசார் குறியிடுடன் கூடிய வேளாண் விளைபொருட்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

<<<<>>>>

மஸ்கட்டில் நடைபெற்று வரும் ஆசியக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

**<<<<>>>>**

குவஹாத்தில் மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ்குமார் கருணாகரன் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர், 13-21, 21-14, 21-16 என்ற செட் கணக்கில் சீனாவின் **Wang Zhug Xing**-ஐ வென்றார்.

இன்று நடைபெறும் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அன்மோல் கார்ப் - சீனாவின் **Cai Yan Yan**-ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் தனிஷா கிராஷ்டோ – அஷ்வினி பொன்னப்பா இணை - சீன இணையை இன்று எதிர்கொள்கிறது.

**<<<<>>>>**

சீன தைபேயில் நடைபெற்று வரும் சர்வதேச வில்வித்தைப் போட்டியில் 4 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களுடன் இந்தியா பதக்கப்பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ளது.

**<<<<The End>>>>**